**நாள் : 21.06-2019.**

**O.S.248/2012**

**கோவிந்தசாமி, PW2.**

**சாட்சி இன்று ஆஜர். சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை**

**7 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை ..**

நான் 3 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். யார் யார் மீது வழக்கு போட்டுள்ளார்கள் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. வழக்கின் சொத்து எந்த கிராமத்தில் உள்ளது என்பது தெரியும். முகாசிப்பிடாரியூர், கோவில்பாளையம் கிராமத்தில் உள்ளது. 20.07.2009 ம் தேதி நேரமாகிவிட்டபடியால் மறுநாள் 21.07.2009 ம் தேதி நான் இன்னார் என்று நிரூபித்து கையெழுத்து செய்தேன். சார்பதிவாளார் அலுவலகத்தில் நான் கையெழுத்து போட்ட தேதி 21.07.2009. பிரமாணப் பத்திரிக்கையில் உள்ள சங்கதிகள் நான் சொல்லித்தான் தயாரித்தார்கள். எனது பிரமாண பத்திரிக்கையில் உள்ள சங்கதிகள் பொய்யானவை என்றால் சரியல்ல. 21.07.2009 ம் தேதி பதியப்பட்ட கிரையப் பத்திரம் போலியானது என்பதால்தான் நாங்கள் எங்கள் உறவினர்களுக்குள் கையெழுத்து செய்து கொண்டோம் என்றால் சரியல்ல. 1 ம் பிரதிவாதி எனது மாமனார் என்பதாலும், 4 ம் பிரதிவாதி எனது மனைவி என்பதாலும் நான் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.